**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**அசல் வழக்கு எண். 11/2025**

2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய முருகவேல் **PW2.** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 12.06.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகவேல் | | |
| Father /Husband Name | : கிருஷ்ணமூர்த்தி | Court | : |
| Village | : நில அளவையர், தில்லையாடி கிராமம் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 49/2025 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது தில்லையாடி கிராம நில அளவையராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணமானது 30.11.2023 அன்று நான் வழங்கிய சான்று தான். அந்த சான்று **வாசாஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பொறையார் கிராம புஞ்சை சர்வே எண்.78/1 மற்றும் 78/2 ஆகிய எண்கள் சர்வே எண் 78/5A1A ஆக மாற்றம் அடைந்திருந்தது. 3 மாதங்களுக்கு முன்னர் மேற்படி புல எண் 78/5A1A1 என்ற எண்ணாக மாற்றப்பட்டுள்ளது. வாசாஆ 5 ஆன ஆவணத்தை நான் வழங்கியபோது சர்வே எண் 78/5A1A ஆக இருந்தது. சர்வே எண் 78/1 ன் விஸ்தீரணம் 386.50 சதுர மீட்டர் ஆகும். சர்வே எண் 78/2 ன் விஸ்தீரணம் 59.50 சதுர மீட்டர் ஆகும். மொத்த விஸ்தீரணம் 446 சதுர மீட்டர் ஆகும். மேற்படி புல எண்களின் புதிய புல எண்ணான 78/5A1A1 என்ற எண்ணின் மொத்த விஸ்தீரணம் 446 சதுர மீட்டர் ஆகும்.